
Registered as a Newspaper
பக்கங்கள் 16 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 55
சனிக்கிழமை
20 ஜனவரி 2024

முச்சந்தி முரளி



"ஒரு கட்சித் தேர்தலுக்கு இந்தளவு அக்கப்போர் அவசியமில்லை கண்டியளோ"

## கிழக்கு ஜெருசலேம் பலஸ்தீனத் தேசமே!

### அங்கீகரிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 20
கிழக்கு ஜெருசலேம், காஸா மற்றும் மேற்குக்கரை ஆகியவற்றை பலஸ்தீனத்தின் ஒரு பகுதியாக அங்கீகரிப்பதன் மூலமே தற்போது ஏற்பட்டுள்ள போர் நிலையைத்

15



## ஐ.நா.வை எதிர்கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் புதுவியூகம்

### அணிசேரா நாடுகளை கைக்குள் போட முயற்சி

கொழும்பு, ஜன. 20
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்காக, அணிசேரா நாடுகளின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீவிரமாக இயங்கி வருகின்றார்.

15

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை மீளாய்வு செய்யவேண்டும் இலங்கை!

### ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மீண்டும் வலியுறுத்து

**கொழும்பு, ஜனவரி 20**
**இலங்கை அரசாங்கம் தனது உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை மீளாய்வு செய்ய வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.**

15

## மயங்கி வீழ்ந்து ஒருவர் இறப்பு!

### பரிசோதனையில் அவருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், ஜன. 20
மயங்கி வீழ்ந்த குடும்பத்தலைவர் ஒருவர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். பரிசோதனையில் அவருக்கு டெங்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.
அரியாலை, இராசாத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த செல்வராசா சிந்துஜன் (வயது - 31) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
கொக்குவில் பகுதியில் உள்ள வங்கியொன்றுக்கு தனது தேவைகளுக்காகப் பணம் எடுக்கச் சென்ற அவர், திடீரென மயங்கி வீழ்ந்த நிலையில் தனியார் மருத்துவமனையொன்றில் சேர்க்கப்பட்டு, பின்னர்



15

## இலங்கையின் பொருளாதாரம் பலப்படுகிறது!

### நாணய நிதியம் சான்றிதழ்



கொழும்பு, ஜன. 20
இலங்கையின் பொருளாதாரம் மெல்லமெல்லப் பலப்படுகின்றது என்று சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான தூதுக் குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர் தெரிவித்துள்ளார்.
சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகள் அண்மை

15

### மத்திய குழுக்கூட்டம் ரத்து:

## பரபரப்பு நிறைந்த சூழலில் தமிழரசின் தேர்தல் நாளை!

யாழ்ப்பாணம், ஜன. 20
இலங்கை தமிழரசுக் கட்சிக்கு புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நாளையதினம் இடம்பெறவுள்ள நிலையில், இன்று இடம்பெறுவதாக இருந்த

15

### கடைகள், சொத்துக்களை எரிக்க

## பெல்ஜியத்திலிருந்து ரூபா 1,900,000 பேரம்!

### பிரதான சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது சூத்திரதாரியைப் பிடிப்பதற்கு இன்டர்போல்

யாழ்ப்பாணம், ஜன. 20
யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியிலுள்ள பிரபல்யமான ஆடை விற்பனை நிலையங்கள், கார் மற்றும் வீடுகளை எரித்த குற்றச்சாட்டில், யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பதில் பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் உள்ள இரண்டு கடைகள் அண்மையில்

15

## பங்களாதேஷ் மீனவரொருவர் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஜன. 20
முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் கடற்கரைப் பகுதியில் மீனவர் ஒருவர் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
தெப்பம் ஒன்றில் மேற்படி சடலம் கரையொதுங்கியுள்ளது.

15



## ஜனாதிபதியாக சஜித் பதவியேற்பது உறுதி!

### அஜித் பெரேரா நம்பிக்கை

கொழும்பு, ஜன. 20
வடக்கு - கிழக்கு தமிழர்கள் உட்பட அனைத்து இன மக்களையும் அரவணைத்து பயணிக்கக்கூடிய தலைவரான சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்குவதற்கு அனைத்து மக்களும் உறுதியுடன் உள்ளனர் என்று ஐக்கிய

15

## சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழில் ஆரம்பமானது நேற்று!

யாழ்ப்பாணம், ஜன. 20
யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றத்துடன் இணைந்து வரையறுக்கப்பட்ட இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டுச் சேவைகள் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 14ஆவது சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பமானது.

15




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுக்கள் மீதான கொடுமைகள்; பௌத்தர்கள் எதிர்க்கவேண்டும்

## இந்துசமயப் பேரவையின் தலைவர் வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஜன.20

**மட்டக்களப்பில் பசுக்களின் வாயில் சிங்கள மக்கள் வெடி வைத்துக் கொடுமைப்படுத்துகிறார்கள். கொல்லுகிறார்கள் என்ற செய்தி பெரும் கவலையை ஏற்படுத்துவதாகவுள்ளது. இந்த நாட்டில் மிகப் பெரும் சோதனையை ஏற்படுத்தும் செயல்களாக இந்தச் சம்பவங்கள் அமைந்துள்ளன.**

இத்தகைய சம்பவங்களுக்கு எதிராக பௌத்த குருமார்கள், பௌத்த தலைவர்கள் கிளர்ந்தெழவேண்டுமென இந்துசமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ.சக்திகிரீவன் வேண்டுகோள் விடுத்தார்.

வரலாற்றுப் பிரசித்திபெற்ற பட்டிப் பொங்கல் விழா கடந்த செவ்வாய்க்கிழமை மாலை யாழ்.நகரில் அமைந்துள்ள சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் பசுக்கள் இடபங்களைப் பாதுகாக்கும் சகல சமய நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பசுக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத் தடுத்து நிறுத்துவதன் ஊடாகவே இந்த நாட்டில் அமைதி நிலவும். இலங்கை நீருள் மூழ்கப் போகிறது என்று ஒரு செய்தி பரப்பப்படுகிறது. பசுக்களுக்குத் தொடர்ச்சியாக கொடுமைகள் இழைக்கப்படுமாயின் இலங்கை நிச்சயம் மூழ்கித்தான் போகும். எனவே, பௌத்த குருமார்கள் பொறுப்புணர்ந்து இந்த நாட்டையும், மக்களையும் காப்பாற்ற உதவ வேண்டும் - என்றார். (ரி-66)



## நாள்தொழில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணியில் இந்த வருடத்துக்கான நாள்தொழில் கடந்த புதன்கிழமை ஆரம்பமானது. வருட திருப்பலியின் போது குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட பர்ணாந்து ஜெயசீலன் என்பவர், பங்கு மக்கள் சார்பாக நாள்தொழிலைக் கடலில் ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் பங்குத்தந்தை அமல்ராஜ், புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் சங்க நிர்வாக உறுப்பினர்கள், சங்க அங்கத்தவர்கள், தொழிலாளர்கள் பங்கு மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-27)

## கட்டைக்காட்டில் திடீர்ச் சுற்றிவளைப்பு

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காட்டுப் பகுதியில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை திடீர்ச் சுற்றிவளைப்பை மேற்கொண்டு மீனவர்களையும், அவர்களது கடற்றொழில் சொத்துகளையும் சோதனை செய்தனர்.

இதன்போது தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளை வைத்திருந்த மீனவர்களிடம் இருந்து குறித்த வலைகள் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

எனினும் சுருக்கு வலை அகப்படவில்லை. ஆனால் அதிகளவு தங்கூசிவலைகள் கைப்பற்றப்பட்டதோடு அவற்றை அழிக்கும் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டனர். (ரி-27)

## இந்த வருடத்தில் டிஜிற்றல் அ.அட்டை

இலங்கையில் டிஜிற்றல் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் என்று ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜி.பிரதீப் சபுதந்திரி தெரிவித்தார். இதற்காக குடிமக்களின் தரவுகள், கைரேகைகள் மற்றும் முகத்தை அடையாளம் காணுதல் தொடர்பான தரவு சேகரிப்பு எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் அனைத்து பிராந்திய செயலகங்கள் ஊடாக ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## வீதியைப் புனரமைக்குக மக்கள் வேண்டுகோள்!

சாவகச்சேரி, ஜன.20

காலபோக நெற்செய்கை அறுவடை ஆரம்பிக்க முன்னர் வீதியைப் புனரமைத்து வழங்குமாறு நெற்செய்கையாளர்களும், வீதியைப் பயன்படுத்தும் மக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். கொல்லங்கிராய் தொடக்கம் மறவன்புலவு வரை இருமருங்கிலும் நெல்வயல்கள் காணப்படுகின்றன. இந்த வயல்களில் விரைவில் நெல் அறுவடை ஆரம்பமாகவுள்ளது.

நெற்செய்கையாளர்கள் காலபோக நெற்செய்கை விதைப்புத் தொடக்கம் அறுவடை வரை இந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த வீதி நடந்து செல்லமுடியாத அளவுக்குப் பல இடங்களில் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. அத்துடன் வீதியின் இருமருங்கிலும் பற்றைக் காடாகக் காணப்படுகிறது. மழை காலங்களில் வயல்களில் வெள்ளம் காணப்படும் வேளையில் விஷப்பாம்புகள் பற்றைகளுக்குள் தங்குகின்றன.

வயல்களுக்கு வாகனங்கள் பயணிப்பதற்கு வீதியைப் புனரமைத்து வழங்குங்கள் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ரி-9)

## கழிவுப்பொருள்களால் வீதியில் துர்நாற்றம்

சாவகச்சேரி, ஜன.20

கைதடிப் பாலத்துக்கு அருகில் ஏ-9 வீதியிலிருந்து தச்சன்தோப்புக்குச் செல்லும் வீதியோரத்தில் வீசப்படும் 'பம்பர்ஸ்' உள்ளிட்ட கழிவுகளால் வீதியில் எழுகின்ற கடும் துர்நாற்றத்தைச் சகிக்க முடியாமல் பொதுமக்கள் மாற்று வீதிகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த வீதியைப் பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பயன்படுத்துகின்றனர். இரவு வேளைகளில் விஷமிகள் சிலர் வாகனங்களில் வீட்டுக்கழிவுகளைக் கொண்டுவந்து வீதியின் இருமருங்கிலும் கொட்டிவிட்டுச் செல்கின்றனர். முதியோர் மற்றும் சிறுவர்கள் பயன்படுத்தும் 'பம்பர்ஸ்' உட்பட வீட்டுக் கழிவுகளே இவ்வாறு கொட்டப்படுகின்றன.

பறவைகள் மற்றும் மிருகங்கள் அவற்றினைக் கிளறுவதால் வீதியோரத்தில் பெருமளவு கழிவுகள் காணப்படுகின்றன. தற்போது வயல்களில் வெள்ளம் நிற்பதால் இந்தக் கழிவுகளில் இருந்து எழும் துர்நாற்றத்தால் 3 கிலோ மீற்றர் தூரத்துக்கு வீதியில் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே கழிவுகளைக் கொட்டுவோரைக் கட்டுப்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்த வீதியால் பயணிப்போர் கோரியுள்ளனர். (ரி-9)

## அக்கராயன் மருத்துவமனையில் உணவகம் வேண்டும்

அக்கராயன் பிரதேசமருத்துவமனையில் உணவகம் இல்லாததன் காரணமாக நோயாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

குறிப்பாக மாதாந்த சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் இரத்தப் பரிசோதனை முடிந்தவுடன் தேநீர் அருந்துவதற்கோ, சிற்றுண்டிகளைப் பெறவோ இந்த மருத்துவமனையில் உணவகம் இயங்காததால் ஒரு கிலோ மீற்றர் தூரம் செல்லவேண்டியுள்ளது.

இது தொடர்பாக மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் கருத்துத் தெரிவிக்கையில், உணவகத்தை இயக்குவதற்கு கட்டடம் அமைக்கப்படவேண்டும். அதற்கான நிதி பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் ஒதுக்கப்படவேண்டும். அப்போதுதான் கட்டடம் அமைத்து உணவகத்தினை இயக்க முடியும் - என்றனர்.

அக்கராயன் மருத்துவமனையில் உணவகம் அமைப்பதற்கான நிதியினை கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப்பணிமனை பெற்றுக்கொடுக்கவேண்டும் என பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (ரி-13)

## கொக்குவிலில் டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். மாவட்டத்தில் டெங்குத் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட கொக்குவிலில் டெங்கு ஒழிப்பு வேலை திட்டம் கடந்த வியாழக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மாகாண சுகாதாரப் பணிப்பாளர், வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரின் நேரடிப் பங்கேற்புடன் நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/120 கிராம சேவையாளர் பிரிவில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்முன்னெடுக்கப்பட்டது. கொக்குவில் பகுதியிலுள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸார் களத்தரிசிப்பை மேற்கொண்டதோடு வீடுகளில் டெங்கு நுளம்பு காணப்படும் இடங்கள் அகற்றப்பட்டு, பல வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கையும் வழங்கப்பட்டது. (ரி-20-66)

## நுண்கலை வகுப்புகள்

திருமறைக் கலாமன்றம் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 2024 ஆம் ஆண்டுக்கான நுண்கலைப் புதிய வகுப்புகள் அனைத்தும் தைப்பூச தினமான எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் ஆரம்பமாகவுள்ளன.

இவற்றைப் பயில விரும்புவோர் கலைத்தூது அழகியற் கல்லூரியில் நேரடியாக விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறும், மேலதிக விபரங்களுக்கு 021 222 9419 அல்லது 021 222 7955 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளமுடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ப-66)

## முடிவுத்திகதி நீடிப்பு

*யாழ்ப்பாணம், ஜன. 20*

வட இலங்கை சங்கீதசபையின் 2024ஆம் ஆண்டுக்கான பரீட்சை விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைகள் அனைத்தும் வரும் மே மாதம் நடைபெறவிருக்கும் சாதாரண தரப் பரீட்சைகள் முடிவடைந்த பின்னர் நடைபெறும் என்றும் சபைத் தலைவர் பொ.ரவிச்சந்திரன் அறிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பாவனை; பொலிஸாருக்கு ஆப்பு

## தென்னக்கோன் அதிரடி



**கொழும்பு, ஜன. 20**

**போதைப்பொருள் பாவிக்கும் அதிகாரிகள் பொலிஸ் சேவையில் இருந்து நீக்கப்படுவார்கள். ஒரு மாத காலத்துக்குள் இதற்கான நடவடிக்கை இடம்பெறும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.**

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொலிஸ் துறைக்குள் போதைப்பொருள் பயன்படுத்தும் குழுவை நாம் அடையாளம் கண்டுள்ளோம். அவர்களது பெயர்ப்பட்டியல், மாகாணங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

குறுகிய காலத்துக்குள் ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படும்- என்றார். (ச-44)



# இரணைமடு வான்கதவுகள் திறக்கப்பட்டன

கிளிநொச்சி, ஜன.20

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் மூன்றாவது தடவையாக நேற்றுத் திறக்கப்பட்டன.

தற்போது குளத்துக்கு நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில் குளத்தின் 14 வான்கதவுகளில் 8 வான்கதவுகள் 6 அங்குலத்துக்குத் திறந்து விடப்பட்டன.

குளத்தின் கீழுள்ள தாழ் நிலப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் பாதுகாப்புடன் செயற்படுமாறு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது. (ப-13)

# மின்சாரசபை ஊழியர் 15 பேர் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜன. 20

போராட்டத்தில் ஈடுபட்டு பணிக்கு இடையூறு விளைவித்த 15 ஊழியர்களைப் பணியிலிருந்து இடைநீக்கம் செய்துள்ளது மின்சாரசபை.

மின்சாரசபையின் மறுசீரமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து குறித்த மின்சாரசபை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை , நிர்வாகத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை மீறும் ஊழியர்களைப் பணி இடைநீக்கம் செய்து உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர மின்சாரசபை நிர்வாகத்துக்குப் பணிப்புரை விடுத்திருந்தார். (ச-இ)

# கஞ்சாவுடன் கைது!

நெடுந்தீவு , ஜன.20

நெடுந்தீவுப் பகுதியில் கஞ்சாவுடன் சந்தேகபர் ஒருவர் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டார். இதன்போது அவரிடமிருந்து ஒரு கிலோ 50 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது.

குறித்த சந்தேகநபர் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ப-27)

# விதிகளை மீறுவோரை கண்டறியும் சி.சி.ரி.வி.

கொழும்பு, ஜன. 20

போக்குவரத்து விதிகளை மீறுபவர்களை சி.சி.ரி.வி. கமராக்களூடாகக் கண்காணித்து தண்டம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் இந்த நடவடிக்கை நடைமுறைக்கு வரவுள்ளது.

போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடுவோர் பற்றிய விவரங்களை அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு வழங்குவதன் மூலம் அந்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸாரால் சாரதி கைதுசெய்யப்படுவார்.

கைதுசெய்ய முடியாத பட்சத்தில் வாகன உரிமையாளரின் வீட்டுக்குத் தண்டப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

# ரியூசன் செலவு ரூ. 121 பில்லியன்!

கொழும்பு, ஜன. 20

இலங்கையிலுள்ள 57 இலட்சம் குடும்பங்களும் வருடாந்தம் ரியூசனுக்காக மட்டும் 121-122 பில்லியன் ரூபாவை செலவிடுகின்றன என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

தெஹியோவிட்டாவிலுள்ள பாடசாலையொன்றில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

"அரசாங்கம் கல்விக்கென 402 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. ஆயினும் குடும்பமொன்று மாதாந்தம் சராசரியாக 20 ஆயிரம் ரூபாவை ரியூசனுக்காகச் செலவிடுகிறது" என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

# புதினம் தெரியுமோ?

குளிக்கப் போய்ச் சேறு பூசின கதைமாதிரி டெங்குக் காய்ச்சலை மாத்தவெண்டு ஆஸ்பத்திரிக்குப் போனால் அங்க இன்னமும் வருத்தத்தைக் கூட்டிறமாதிரி நுளம்புகள் படையெடுக்குதாம். அதுவும் டெங்கு வார்ட்டில தான் இந்த நுளம்புப்படையெடுப்பு கூடவா இருக்கு. மந்திகை, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியளில உள்ள டெங்கு வார்ட்டில இருக்கிறவை, இந்த நுளம்புக்கடி தாங்கேலாமல் வருத்தம் மாறமுதலே ரிக்கெற் வெட்டிக் கொண்டு, பிரைவேட்டா போய் காட்டுகினம் எண்டும் கதையடிபடுகுது. அதோட டெங்கு வார்ட்டுக்குள்ள வாற நுளம்புகள் பக்கத்துக்கு வார்ட்டுகளுக்கும் அப்பிடியே விசிட் பண்ணி, எல்லாரையும் ஒரு குத்துக் குத்தி சுகம் விசாரிக்காமல் போகாயினம். இப்பிடி நுளம்புகளின்ர சுகவிசாரிப்பால, நோர்மல் வருத்தமெண்டு வந்தவையும் டெங்கால பாதிக்கப்படுகிற நிலைமை வந்திருக்கு.

எல்லா ஆஸ்பத்திரியளிலையும் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த, வகைதொகையில்லாமல் புகையடிச்சபடி தான் இருக்கினம். அதுக்கும் டிமிக்கி குடுத்திட்டு, இப்பிடி ஓயாத அலையா நுளம்புகள் பாயுதெண்டால் எங்கையோ பிழை இருக்கெண்டுதான் அர்த்தம். இந்தமுறை வந்திருக்கிற டெங்கு நுளம்புகள் கொஞ்சம் அப்டேட்டான நுளம்புகள் எண்டு சொல்லுகினம். முந்தின நுளம்புகள் இளநீர்க்கோம்பை, தொட்டி, ரின், சட்டி, சிரட்டை, குட்டை எண்டு மழைத்தண்ணி தேங்கக்கூடிய இடங்களிலதான் குடியிருப்பினம். அதால அவையைக் கண்டுபிடிச்சு அழிக்கிறது சுகம். ஆனால் இப்ப மரப்பொந்துகளுக்கையும் டெங்கு நுளம்புகள் ஒளிச்சிருந்து கெரில்லாத் தாக்குதல் செய்யிறதால எப்பிடி உதுகளை அழிக்கிறது எண்டு சுகாதாரத் திணைக்களக்காரர் தலையைச் சொறியினமாம். ஆனால் மந்திகை, பெரியாஸ்பத்திரி ரண்டுக்கையும் வாற நுளம்புகள் உப்பிடி மரப்பொந்துக்க ஒளிச்சிருக்கேலை. அவை இருக்கிற இடம் ஆஸ்பத்திரிக்கு பக்கத்தில உள்ள வடிகால்கள் தான். அதிலையும் பெரியாஸ்பத்திரியில தான் ஆகலும் கடுமை.

கோட்டையைச் சுத்தி அகழி இருக்கிறமாதிரி பெரியாஸ்பத்திரியைச் சுத்தி அரைவாசிக்கும் ஒரு பெரிய வடிகால் இருக்குது. எவ்வளவுதான் அதைக் கிளீன் பண்ணினாலும் அது நுதம்பிப்போய், சேறும் சகதியுமாத்தான் இருக்கும். அந்த வாய்க்காலை நாற வைக்கிறதில பெரும் பங்கு நாகவிகாரைக்குத்தான் இருக்கு. ஆரியகுளம் சந்தியில இருக்கிற விகாரைக்குப் பக்கத்தில உள்ள கட்டடத்திலதான் ஊர் வாற சிங்கள ஆக்கள் கூடுதலா நிக்கிறவை. அவையின்ர கழிவுத்தண்ணியள், மலக்கழிவுகள் எல்லாம் இந்த வாய்க்காலுக்குள்ள அப்பிடியே நேர போறதாலதான் அது எப்பவும் கூவம் மாதிரி நாறிக்கொண்டிருக்குது. இப்பிடி நாறி, நுதம்பிக் கிடக்கிற இடத்தைக் கண்டிட்டு டெங்கு நுளம்புகள் சும்மா இருப்பினமோ? வேற இடங்களில இருக்கிற நுளம்புகளையும் கூப்பிட்டு, எல்லாரும் இந்த வாய்க்காலுக்குள்ள கூடியிருந்து கும்மியடிச்சுப் போட்டு, பின்னேரத்திலையும், காலமையிலையும் மெல்லப் பறந்துபோய், பக்கத்தில உள்ள ஆஸ்பத்திரியில நல்லா ரத்தம் குடிச்சு, சொகுசா இருக்கினம். உந்த வாய்க்காலை வடிவாக் கிளீன் பண்ணி, விகாரைக்குள் வாறவையின்ர கழிவு அதுக்க போகவிடாமல் பாத்தாலே டெங்கால வாற பாதிப்பை அரைவாசிக்கும் மேல கட்டுப்படுத்தலாம். ஆனால் இப்ப சிக்கல், ஆர் சொல்லி விகாரைக் கழிவை வாய்க்காலுக்க வரவிடாமல் செய்யிறது எண்டதுதான். பிக்குவுக்கு மணி கட்டுறது ஆர்?



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக் கட்சித் தலைவர் தெரிவு கட்சி ஜனநாயகத்தை வலுவாக்கும்

### எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.19

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவானது உட்கட்சி ஜனநாயகத்தை வெளிப்படுத்தும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம், முல்லைத்தீவு, மாங்குளம் நீதிமன்றத்துக்கு வழக்கு நடவடிக்கைக்காக வந்திருந்த அவர், ஊடகங்களின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு திருகோணமலை யிலே இடம்பெற இருக்கின்றது. பொதுச்சபையிலே அங்கம் வகிப்பவர்களுக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று தற்போது பொதுச்சபையிலே இருக்கின்ற பொதுச் செயலாளர் மூலம் அறிந்திருக்கின்றேன். இந்த தேர்தல் உச்சக்கட்டமாக உட்கட்சி ஜனநாயகத்தை வெளிப்படுத்தும் - என்றார். (எ-19)

## ஆளுமைப் பகிர்வும் கலந்துரையாடலும்

சுழிபுரம், ஜன.20

யாழ்ப்பாணம், சுழிபுரத்தில் அமைந்துள்ள கே.ஏ.எஸ்.சத்தியமனை நூலக அரங்கில் மூத்த சட்டத்தரணி சோ.தேவராஜா தலைமையில் மஹாகவி உருத்திரமூர்த்தியின் ஆளுமைப் பகிர்வும் கலந்துரையாடலும், பிஞ்சுப் பாடல்கள் அரங்காற்றுகை என்பன இன்று சனிக்கிழமை பி.ப.3 மணியளவில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் எழுத்தாளர்களான சி.ரமேஷ், மல்லிகா செல்வரட்ணம், சின்னராஜா விமலன், க.சிறீகணேசன், அ.முருகதாஸ், ந.இரவீந்திரன், அரசி சுமண்யன் விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு உரைகள் நிகழ்த்தவுள்ளனர். (ப-66)

## வர்த்தகக் கண்காட்சியில் புத்தகத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நாளை ஞாயிற்றுக்கிழமை வரை யாழ்.முற்றவெளியில் இடம்பெறவுள்ளது.

குறித்த கண்காட்சியில் நான்காவது ஆண்டாக இந்தமுறையும் 'எங்கட புத்தகங்கள்' புத்தகத் திருவிழா நடைபெறவுள்ளது. 'எங்கட புத்தகங்கள்' புத்தகத் திருவிழாவில் 1000 க்கும் மேற்பட்ட ஈழத்து எழுத்தாளர்களின் 1000 க்கும் மேற்பட்ட தலைப்புகளில் புத்தகங்கள் காட்சிப்படுத்தி விற்பனை செய்யப்படுகின்றன.

கண்காட்சியில் அனைத்துப் புத்தகங்களுக்கும் 10 வீத விலைக்கழிவு வழங்கப்படுமென புத்தகத் திருவிழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ப-66)



## கால்நடை உறைவிடமான துணுக்காயில் சந்தைகள்

### இயங்க வைக்குமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.20

முல்லைத்தீவு. துணுக்காய் பிரதேசசபையின் கீழ் காணப்படும் இரண்டு சந்தைகள் இயங்காத நிலையில் கால்நடைகளின் உறைவிடமாகக் காணப்படுகின்றன.

பெருமளவு நிதிச்செலவில் 2012 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சந்தைகளே இதுவரை இயங்காதுள்ளன என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த காலங்களில் நடைபெற்ற பிரதேசசபையின் அமர்வுகளில் இந்தச் சந்தைகளை இயங்க வைக்க வேண்டும் என்றுகோரிக்கை விடுத்திருந்த போதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே மக்களின் நன்மைகருதி சந்தைகளை இயக்க வைப்பதற்கு துணுக்காய் பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்த னர். (ச-13)

## சுந்தரம் டிவகலாலா நினைவுதினம் நாளை

யாழ்ப்பாணம், ஜன. 20

வடக்கு- கிழக்கு மாகாண கல்வியமைச்சின் முன்னாள் செயலாளர் அமரர் சுந்தரம் டிவகலாலாவின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி நினைவுப் பேருரை நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வு தந்தை செல்வா கலையரங்கத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வவுனியா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நினைவுப்பேருரையை 'எதிர்கால நோக்கில் இலங்கையில் முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகளும் இன்றைய நடைமுறைகளும்' எனும் தலைப்பில் பேராசிரியர் ஜெயலக்சுமி இராசநாயகம் ஆற்றவுள்ளார். (ச)

## துணைவேந்தரைச் சந்தித்த அமெரிக்கத் தமிழ்ச் சங்கம்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மற்றும் துறைத் தலைவர்களுடன், அமெரிக்கத் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடனான நட்புறவுச் சந்திப்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் 'பைடென் யாழ்' நிகழ்வுகள் தொடர்பிலும், யாழ்.பல்கலைக்கழக பேரவைக் கல்வி சார்ந்த முன்னெடுப்புகளில் இணைந்து பணிபுரியும் வாய்ப்புகள் பற்றியும் கலந்தாலோசனை நடத்தப்பட்டது. (ரி-66)



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பண்ணையாளர்களாலும் விவசாயிகளாலும் பட்டிப்பொங்கல் விழா அண்மையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. (ம-113)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்ப விடயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். மனதில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். சங்கடங்கள் நீங்கும். சக வியாபாரிகளிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். நன்மைகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**கடகம்:** திடீர்ச் செலவுகளும் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறை வேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். இளைய சகோதரர்களால் உதவியும் உற்சாகமும் உண்டு. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கணவன் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல்நலனில் கவனம் தேவை. வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். உறவினர்களால் சில குழப்பங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** அவப்பெயர் நீங்கும். நண்பர்களை தொடர்பு கொண்டு பேசுவீர்கள். தட்சிணாமூர்த்தி வழிபாடு தடைகளைத் தகர்க்கும். முக்கியமான முடிவுகள் சாதகமாகும்,வியாபாரத்தில் மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**மகரம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். ஆதாயம் கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பதவிக்காக பலியிடாதீர்!

தென்னிலங்கை அரசியல்களம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. தேர்தல்களை மனதில் கொண்டு புதிய கூட்டணி உருவாக்கங்கள், கட்சித் தாவல்கள், மாற்றுக் கட்சியினருக்கு தூண்டில் போடுதல், பேரம்பேசல்கள் என ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான அத்தனை வியூகங்களை தென்னிலங்கைக் கட்சிகள் கையில் எடுத்து, மும்முரமாக களத்திலும் இறங்கிவிட்டன. ஆனால் தமிழ்க்கட்சிகளோ இதற்கு நேரெதிரானபாதையிலேயே- உட்கட்சிப் பூசல்களை இன்னும் விரிவாக்கும் நோக்கிலேயே- தங்கள் பயணத்தை இன்னமும் பேணுகின்றன. குறிப்பாக தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்துக்கான தேர்தல் இத்தகைய பூசல்கள், பிளவுகள் என்பன நிரந்தரமாக நீடிப்பதற்கான ஏதுநிலைகளை குறைவின்றித் தோற்றுவித்துள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் ஏகப்பிரதிநிதிகள் என்றுமார் தட்டுமளவுக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு விஸ்வரூபம் எடுத்திருந்தபோது, அதன் மையப்புள்ளியாக தமிழரசுக் கட்சி விளங்கியது. ஆனால் காலவோட்டத்தில்- 2009 க்கு பின்னர்- புலிகளின் ஆயுத மௌனிப்போடு கூட்டமைப்பு சிதைவடைந்தது. பங்காளிக்கட்சிகளை ஒவ்வொன்றாக வெளியேற்றிவிட்டு அல்லது வெளியேறச் செய்துவிட்டு, 'தமிழர்களின் அரசியல் ஏகப்பிரதிநிதிகள்' என்ற அடையாளத்தைத் தொலைத்துவிட்டு, தமிழரசுக் கட்சி தனிமரமாக நிற்கின்றது. இத்தகைய நிலையில், அந்தக் கட்சியைப் பலப்படுத்த வேண்டுமாயின் புதிய தலைமை தேவை என்றுணரப்பட்டது. ஆனால் தமிழரசின் தலைவராகும் ஆசை பலருக்கும் இருந்ததால், மும்முனைப் போட்டி ஏற்பட்டு, கட்சியின் வரலாற்றில் முதன்முறையாக தேர்தல்மூலம் தலைவரைத் தெரிவுசெய்யும் நிலை தோன்றியுள்ளது. தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலுக்கு இன்னமும் ஒருநாள் மட்டுமே இருக்கின்றது. ஆனால் கட்சியின் நிர்வாகச் சீரின்மையால், இந்தத் தலைமைத்துவத்துக்கான தேர்தல் நடக்குமா? இல்லையா? என்பது இன்னமும் மர்மமாகவே இருக்கின்றது. உட்கட்சித் தேர்தலில் எத்தனை பேர் வாக்களிக்கப்போகின்றார்கள் என்பது குறித்தோ அவ்வாறு வாக்களிக்கத் தகுதியானவர்களின் பெயர் விவரங்கள் பற்றியோ இன்னமும் கட்சியின் தலைமைப் பீடம் இறுதிமுடிவு செய்யவில்லை. அதனால் தலைவர் பதவிக்குப் போட்டியிடுவோர் கண்ணுக்குத் தெரியாத பொதுச்சபை உறுப்பினர்களிடம் வாக்குச் சேகரிக்க வேண்டிய அபத்தநிலை.

அதைவிட இன்னொரு முக்கியமான விடயம், கட்சியின் யாப்பில் சொல்லப்பட்டபடி இந்தத் தேர்தலுக்கான வாக்களிப்பில் கலந்துகொள்ளத் தகுதியான பொதுச்சபை உறுப்பினர்களுக்கு குறைந்தபட்சம் 14 நாட்களுக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அழைப்புக்கடிதம் அனுப்பப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதுவரை (தேர்தலுக்கு இருநாள்களே மீதமுள்ள நிலையில்) அப்படியான கடிதம் எதுவும் பொதுச்சபை உறுப்பினர்களில் பெரும்பாலானோருக்குக் கிடைக்கவேயில்லை. தலைவர் தெரிவுக்கான கூட்டம் திருகோணமலையில் நடக்க இருக்கிறது. ஆனால் அதில் கலந்துகொள்வதற்காக ஏனைய மாவட்டங்களில் இருந்து பொதுச்சபை உறுப்பினர்கள் செல்வதற்கான போக்குவரத்து ஒழுங்குகளும் இதுவரை ஏற்பாடு செய்யப்படவில்லை. இப்படி எவற்றையெல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றைக் கணக்கிலெடுக்காத தமிழரசுக் கட்சியினர், தலைமைத்துவப் போட்டியில் களத்தில் குதித்த மூவர் சார்பாகவும் அணியாகப் பிரிந்து நின்று வசைமாரி பொழிவதில் மாத்திரம் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். இதுவொரு உட்கட்சித் தேர்தல் என்பதால் தலைமைத்துவப் போட்டியில் நிற்பவர்கள் பற்றிய கருத்துகளை கட்சியினர் உட்சுற்று அடிப்படையில் மேற்கொள்ளலே ஆரோக்கியமானதாக இருக்கும். அதைவிடுத்து 'அவர் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர், இவர் உணர்ச்சி அரசியல் செய்பவர்' என்றெல்லாம் சகட்டுமேனிக்கு, குழாயடிச் சண்டை போல பொது வெளியில் வேட்பாளர்களும், அவர்களின் ஆதரவாளர்களும் முட்டிமோதிக்கொள்வதும், சேற்றினை வாரியிறைப்பதும் உவப்பானதல்ல. உட்கட்சித் தேர்தலுக்காக இப்போது ஒருவரைத் தூற்றிவிட்டு, பொதுத்தேர்தல் வரும் போது அவர்களை எந்தமுகத்தோடு வேட்பாளராக்கி, மக்களிடம் வாக்குக் கேட்பீர்கள்? இப்படியெல்லாம் சொந்தக் கட்சியாலேயே தூற்றப்பட்டவரை மக்கள் எப்படித் தங்களின் பிரதிநிதியாக ஏற்றுகொள்வார்கள்? என்பதையெல்லாம் கட்சியில் உள்ள அனைவரும் ஒன்றுக்குப் பலமுறை யோசிக்க வேண்டும். தமிழ்த் தேசியத்துக்காக உருவாக்கப்பட்ட கட்சியின் பெருமையையும், இனத்தின் மானத்தையும் பதவி ஆசைக்காக பலியிட்டுவிடாதீர்கள்.






## மக்கள் எதிர்பார்ப்பு மாற்றம்

### அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 20

வீழ்ந்துள்ள பொருளாதாரத்தை மீட்பதற்கு மாற்றமொன்றையே நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர். இந்த வருடம் நிச்சயம் மாற்றம் நிகழும்.

இவ்வாறு கண்டியில் மல்வத்துபீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பின் ஊடகங்களுக்கு அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

"நாட்டில் பிரச்சினைகள் தலைவிரித்தாடுகின்றன. ஆனால் செங்கடலுக்கு போர்க்கப்பல்கள் அனுப்பப்படுகின்றன. இந்த முடிவை எடுக்கும் ஆட்சியாளர்களின் மூளையை நிச்சயம் பரிசோதிக்கவேண்டும். நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கே முதலில் தீர்வுகளைக் கண்டறிய வேண்டும் "என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## தம்மிக்க 'அவுட்'?

கொழும்பு, ஜன. 20

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக நிறுத்துவதற்கு பொதுஜன பெரமுன கட்சிக்குள் ஆதரவு அதிகரித்துள்ளதால் ஜனாதிபதித் தேர்தல் போட்டியிலிருந்து தொழிலதிபர் தம்மிக்க பெரேரா பின்வாங்கக்கூடும் என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிறிதொருவரை வேட்பாளராக நிறுத்தினால் கட்சி பிளவுபடலாம் எனக் கருதி ரணிலுக்கே பெரமுனவில் ஆதரவு அதிகரித்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-44)

## கருணா - ரணில் தொடர்பு

கொழும்பு, ஜன. 20

" ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், எனக்கும் இடையிலான தொடர்பு இப்போதும் நீடிக்கின்றது. எமது மக்களின் நன்மைக்காக அவரை பயன்படுத்திக்கொள்ளத் தயாராகவே இருக்கின்றோம்." என்று தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் கருணா அம்மான் எனப்படும் வி. முரளிதரன் தெரிவித்தார்.

" தேர்தல் குறித்து நாம் இன்னும் முடிவெடுக்கவில்லை. ஜனாதிபதியும் நானும் மிகவும் நெருக்கமானவர்கள், மக்களின் நன்மைக்காக அவரைப் பயன்படுத்திக்கொள்ளத் தயாராகவே இருக்கின்றோம்" என்றும் தெரிவித்தார். (அ-44)

## பிரதமர் தினேஷே!

கொழும்பு, ஜன. 20

பிரதமராக தினேஷ் குணவர்த்தன சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்தும் திட்டம் அரசுக்கு இல்லை. இவ்வாறு ஆளுங்கட்சி பிரதம கொறடாவும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான செயற்றிட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது சிறப்பாக வழிநடத்துகின்றார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## விவசாயிகளுக்கு ரூ. 2 பில்லியன்

கொழும்பு, ஜன. 20

பெரும்போகத்தில் உரத்தைக் கொள்வனவு செய்வதற்காக விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் மேலும் 2 பில்லியன் ரூபா நிதி வைப்பிலிடப்பட்டுள்ளது என்று விவசாய சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விவசாயிகளுக்காக இதுவரை 9 பில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது. ஒரு ஹெக்ரேயர் நெல்லுக்கு 15 ஆயிரம் ரூபா வீதம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

### நாளை

21.01.2024

ஞாயிற்றுக்கிழமை

தை 07

சுபநேரம் : 09.35 - 11.05

ராகுகாலம் : 05.05 -06.35

### நாளொரு நல்வார்த்தை

ஒருவரிடம் நீங்கள்
பெறக்கூடிய மிகச்சிறந்த வெற்றிகளில் ஒன்று,
பணிவில் அவரை வெல்வதே.

- ஜோஷ் பில்லிங்ஸ்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்தத்தை காக்குமாறு மகாநாயக்கர்கள் கடிதம்!

கொழும்பு, ஜன.20

அண்மைக்காலமாக பௌத்த மதம் தொடர்பில் தவறான சித்தாந்தங்களைப் பரப்பும் குழுக்களின் சம்பவங்களை அடுத்து, இலங்கையிலுள்ள மூன்று பௌத்த பீடங்களின் பிரதான பீடாதிபதிகள் (மகாநாயக்க தேரர்கள்) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கூட்டாக இணைந்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

பௌத்த தத்துவம் மற்றும் கலாசார விழுமியங்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பாகக் கவலை தெரிவித்த பிரதம பீடாதிபதிகள், இந்தக் குழுக்களின் செயற்பாடுகளை இனியும் கண்டுகொள்ளப்படாத சம்பவங்களாக ஒதுக்கிவிடமுடியாது என வலியுறுத்தியுள்ளனர்.

மகாநாயக்க தேரர்கள் தனிப்பட்ட நிகழ்வுகளுக்கு அப்பாற்செல்ல வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதோடு, 'தர்மச் சிதைவுகள்' மற்றும் 'சாசனச் சிதைவுகள்' எனக் குறிப்பிடப்படும் பௌத்தக் கோட்பாடுகள் மீண்டும் மீண்டும் சிதைவதைத் தடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை உருவாக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

பௌத்த சமூகத்துக்குள் குழப்பங்களை ஏற்படுத்தி சமூக ஊடகங்கள் ஊடாக இவ்வாறான திரிபுபடுத்தல்களை ஊக்குவிக்கும் நபர்களை எதிர்த்துப் போராடுவதற்கான சட்ட நடவடிக்கைகளை உருவாக்கவேண்டிய அவசரத்தையும் அவர்கள் எடுத்துரைத்தனர். (எ-இ)

# மின்கட்டணம் உயர்ந்ததால் வெளியேறும் நிறுவனங்கள்



**கொழும்பு, ஜன. 20**

**400 சதவீத மின்கட்டண உயர்வால் பல வெளிநாட்டு நிறுவனங்கள் நாட்டைவிட்டு வெளியேறி டுபாய் போன்ற மலிவான கட்டணத்தில் மின்சாரம் வழங்கும் நாடுகளுக்குச் சென்றுள்ளன என்று நிர்மாண கைத்தொழில் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் சுசந்த லியனாராச்சி தெரிவித்துள்ளார்.**

மின் கட்டணத்தைச் செலுத்த முடியாதுள்ள ஏழை மக்களுக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்படுகிறது. எனினும் அமைச்சர்களுக்கு அவ்வாறான பிரச்சினைகள் எதுவும் இல்லை. மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டதால் இவ்வருடம் உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

நீர்த்தேக்கங்கள் நிரம்பியிருக்கும் போது குறைந்த விலையில் நீர் மின்சாரம் வழங்கமுடியும். 52 பில்லியன் ரூபா இலாபம் ஈட்டிய மின்சார சபை அதன் நிவாரணத்தை மக்களுக்கு வழங்காதது ஏன்? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (எ-இ)




மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினர் பொங்கல்விழாவை யாழ்ப்பாணத்தில் உள்ள வசந்தபுரம் பொம்மைவெளி கிராமத்தில் உள்ள சிறுவர்களுடன் கொண்டாடினர். வசந்தபுரம் கிராமத்தின் பங்குத்தந்தை ஜோன் போல் தலைமையில் அன்னா சனசமூக நிலையத்தில் பொங்கல்விழா நடைபெற்றது. (எ-213)



தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் கலந்துரையாடல், யாழ்ப்பாணம், கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச்சபை மண்டபத்தில் இடம்பெற்றது. கலந்துரையாடலில் நீதி, சிறைச்சாலை அலுவல்கள், அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, நீதி, சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன, தேசிய நல்லிணக்க சமூகவாழ்வு, சகவாழ்வு அலுவலக பிரதானி திருமதி துசாரி சூரியராச்சி, பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் கிருஷாந்த பத்திராஜ, யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேசசெயலர்கள், வவுனியா பல்கலைகழக வேந்தர் மோகனதாஸ், திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ம-27)



அளவெட்டி சுப்பிரமுனிய ஆச்சிரம பசுபதீஸ்வரர்கோவிலில் குருதேவர் ஸ்ரீ சிவாய சுப்பிரமுனியசுவாமிகளின் 97ஆவது ஜெயந்திதின நிகழ்வும் திருவாசக முற்றோதல் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன. (ச)



கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் உழவர் திருநாளின் பொங்கல் விழா யாழ்ப்பாணம் வண்ணையம்பதி ஸ்ரீ வேங்கட வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இடம்பெற்றது. (ச-27)



பாடசாலை செல்லும் மாணவர்களின் பெற்றோருக்கு 'மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் பங்களிப்பு' எனும் தொனிப்பொருளில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தென்மராட்சிப் பிரதேச செயலக மனிதவலு அபிவிருத்தி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அலகுகளால் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் குடமியன், வரணி கிராம அலுவலர் பிரிவில் பெற்றோருடனான சந்திப்பு இடம்பெற்றது. (ச-9)



வவுனியா - புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயத்தில் சாதனை படைத்த மாணவர்களையும் வழிப்படுத்திய ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ச-75)



தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தெல்லிப்பழையில் கடந்த வெள்ளிக்கிழமை விற்பனைச் சந்தை நடைபெற்றது.

இதில் பிரதேசத்தைச் சேர்ந்த சிறுதொழில் முயற்சியாளர்களின் விற்பனைப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு முதலீட்டாளர்களுக்கு காணி வழங்கப் பின்னடிப்பு!

## திணைக்களங்கள் மீது குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஜன. 20**

**வடக்கு மாகாணத்தில் முதலீடு செய்ய விரும்புவோருக்கு அரசாங்கக் காணிகளை வழுங்குவதில் திணைக்களங்கள் பின்னடிக்கின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.**

வடக்கு மாகாணத்தில் முதலீடு செய்வதற்கு புலம்பெயர் தமிழர்கள் உட்படப் பலர் ஆர்வம் கொண்டுள்ளனர். நாட்டின் ஏனைய இடங்களில் தொழில் முயற்சிக்கு அரசாங்கக் காணிகள் வழங்கப்படுகின்றன. ஆயினும் வடக்கு மாகாணத்தில் அரச காணிகளை வழங்குவதில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் பின்னடிக்கின்றன என்று கூறப்படுகின்றது. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தொழில் முயற்சிக்காக அரசாங்கக் காணிகளுக்காக விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அந்தக் கோரிக்கைகள் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அரச காணிகளை அடையாளப்படுத்தி வழங்கக்கோரியிருந்தபோதும், அதுவும் நடைபெறவில்லை.

இவ்வாறான நீண்ட இழுத்தடிப்புக்களால் வடக்கில் முதலிடுவதற்கு ஆர்வம் கொண்டவர்கள் தங்கள் முயற்சிகளைக் கைவிடும் நிலைமை தோன்றியுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-எ-125)

## திருவள்ளுவர் மகாசபை வருடாந்த மாநாடு

யாழ்ப்பாணம், ஜன. 20

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் 74 ஆவது வருடாந்த மாநாடும் கல்விசார் ஊக்குவிப்பு வழங்கலும் கௌரவிப்பும் கலைநிகழ்வுகளும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் மத்தி இளங்கதிர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

மகாசபையின் தலைவர் நா. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக பண்டத்தரிப்பு மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி புஷாலினி தியாகராசா பங்கேற்கவுள்ளார். (ச)



## கால்கோள்

யாழ்ப்பாணம், ஜன. 20

மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா அண்மையில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ. அம்பலவாணர், மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையின் முன்னாள் அதிபர் கா. கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-9)

## அச்சுவேலி மருத்துவமனையில் சிறுவர்கள், கர்ப்பிணிகள் சிகிச்சை நிலையம் திறப்பு

அச்சுவேலி, ஜன.20

யாழ்ப்பாணம் அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கான பராமரிப்பு மற்றும் சிகிச்சை நிலையம் கடந்த செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டது.

நீண்டகாலமாகக் கர்ப்பிணிப் பெண்களுக்கான மற்றும் சிறுவர்களுக்கான சிகிச்சையை வழங்குவதில் சிரமத்தை எதிர்கொண்டுவந்த அச்சுவேலி பிரதேச மருத்துவமனையின் தேவையை நிறைவேற்றும் பொருட்டு பத்தமேனியைச் சேர்ந்த ஆறுமுகம் சிவானந்தனின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரின் முழுமையான நிதியுதவியில் 17 இலட்சம் ரூபா பெறுமதியான இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டது.

மருத்துவமனை நலன்புரிச் சங்கச் செயலாளர் ச. முகுந்தன் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில் கட்டடத் தொகுதியை ஆறுமுகம் சிவானந்தன் குடும்பத்தினர் மற்றும் அச்சுவேலி பிரதேச மருத்துவமனை பணிப்பாளர் ஆகியோர் இணைந்து திறந்தனர். (ப-26)

## பட்டிப்பொங்கலும் கோ பவனியும்!

மன்னார், ஜன. 20

யாழ்ப்பாணம் ஞானவைரவர் ஆலயத்தில் பட்டிப் பொங்கலும் கோ பவனியும் கடந்த செவ்வாய்க் கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

ஆலயத்தில் இருந்து ஆரம்பமான கோபவனி யாழ். நகரைச் சுற்றி மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது. தொடர்ந்து சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று மாடுகளுக்கு உணவளிக்கப்பட்டன.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபன், மாநகரசபை முன்னாள் உறுப்பினர் ப. தர்ஷானந்த், யாழ். மாநகரசபை ஆணையாளர் த. ஜெயசீலன், மத குருமார்கள் மற்றும் சமய ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-20)

## நூல் விமர்சன அரங்கு

யாழ்ப்பாணம், ஜன.20

பிரான்ஸில் வசிக்கும் கவிஞரும், மொழிபெயர்ப்பாளரும், வரலாற்று ஆய்வாளருமான க. வாசுதேவனின் பிரெஞ்சுப் புரட்சி நூல் தொடர்பான விமர்சன அரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கொக்குவிலிலுள்ள தேசிய கலை இலக்கியப்பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தநிகழ்வில், நூல் விமர்சன உரைகளை ஆய்வாளர் ச. சத்தியதேவன் ஓய்வுநிலை கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி ந. இரவீந்திரன் ஆகியோரும், பதிலுரையை நூலாசிரியர் க. வாசுதேவனும் ஆற்றவுள்ளனர். (ப)

## நுளம்பு வலைகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 20

டெங்கு பரவுவதன் காரணமாக அமரர் ஜெயந்திரா நினைவாக ப்ரத்யங்கிரா அறக்கட்டளையின் சேவையில் கல்லுண்டாய், பொம்மைவெளிக் கிராமத்தில் வசிக்கும் 50 குடும்பங்களுக்கு டுபாயில் வசிக்கும் விக்னேஸ்வரன் குடும்பத்தினரின் நிதி அனுசரணையில் நுளம்பு வலைகள் கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டன. (ரி-63)

## பொலித்தீன் பாவனை 19 பேர் மீது வழக்கு

தடைசெய்யப்பட்ட பொலித்தீன் பாவனை தொடர்பாகக் கடந்த ஆண்டு 19 பேருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்று மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ். மாவட்டப் பிரதிப் பணிப்பாளர் சுபோகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- சுற்றாடலுக்குப் பாதிப்பு என்று அடையாளப்படுத்தப்பட்ட பொலித்தீன் தொடர்பாக அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டிருந்தன. வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சுற்றிவளைப்பில் தடைசெய்யப்பட்ட பொலித்தீனைப் பாவித்த 19 பேர் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு நீதிமன்றத்தில் அவர்களுக்குத் தண்டப்பணம் விதிக்கப்பட்டது - என்றார். (எ-125)

## வயல் கிணற்றில் பெண்ணின் சடலம் மீட்பு

சாவகச்சேரி, ஜன.20

சாவகச்சேரி, தனங்கிளப்பிலுள்ள வயல் கிணறு ஒன்றில் இருந்து குடும்பப் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது. நுணாவில் மத்தியைச் சேர்ந்த சத்தியராஜ் வேணி (வயது -32) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் ஆறு மாதக் குழந்தையின் தாயாராவார்.

சந்தையில் கடலுணவு வாங்கிவருவதாகக் கூறிச் சென்ற அவர் பின்னர் வீடு திரும்பவில்லை.

வீட்டுக்குச் செல்லும் வழியில் வயல் கரையில் சைக்கிள் காணப்பட்டதை அடுத்து வயலுக்குள் சென்று கணவர் தேடியுள்ளார். அங்கு வயல் கிணற்றில் பெண் சடலமாகக் காணப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-9)

## மன்னார் விவசாயப்பணிப்பாளருக்கு தேசிய விருது

மன்னார், ஜன.20

இலங்கை விவசாயக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் மன்னார் மாவட்ட விவசாயப்பணிப்பாளர் அ. சகிலாபானு தேசிய விருது வழங்கி அண்மையில் கௌரவிக்கப்பட்டார்.

விவசாய டிப்ளோமா கற்கைநெறி, இளமாணிக் கற்கை, இரு முதுமாணிக் கற்கைகள் ஆகியவற்றைப் பூர்த்தி செய்து, கலாநிதிக் கற்கையைத் தொடருகின்றமைக்காகவும், பரந்தன் விவசாயக் கல்லூரியின் முதலாவது அதிபராகவும், தற்பொழுது மன்னார் மாவட்ட விவசாயப்பணிப்பாளராகக் கடமையாற்றி தேசிய விவசாய உற்பத்திக்குப் பங்களிப்பை மேற்கொண்டு வருவதற்காகவும் அவருக்கு இந்தத் தேசிய விருது வழங்கப்பட்டது. (ப-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் 14ஆவது சர்வதேச
































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி




மலர்வு : 04.05.1953 உதிர்வு : 26.01.2018

## அமரர் வி.எம்.கணபதிப்பிள்ளை புலேந்திரன்

(உரிமையாளர் - நியூ V.M.K. ஜுவல்லர்ஸ் - இல. 15, நவீனசந்தைக் கட்டடம், கண்டி வீதி, சாவகச்சேரி)

ஸ்தாபகர் - V.M.K. மில்ஸ்

**திதி: 20.01.2024 வளர்பிறை தசமி**



ஆண்டுகள் ஆறு ஆனபோதும்
பறந்து சென்ற அன்பினைப் பிரிவதனால்
சோகம் என்னும் கடல் தனில் மூழ்கின்றோம்
எத்தனை எத்தனை பொழுதுகள்இங்கு ஆனபோதும்
எம் தலைவன் உங்களுக்கு
நிகர்தான் எதுவோ எம் வாழ்வில்
நீங்கள் இல்லாத எம்கோயில்
கொண்ட வீடு வெறிச்சோடி
நிம்மதி இன்றி தவிக்கின்றோம் காலத்தின் தேவையும்
கடவுளின் கட்டளையும் அன்னையுடன் அகமகிழ்ந்து
ஆனந்தமாக வாழ்வீர் என
ஆறுதலடைகின்றோம் அப்பா....!

**ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

**கண்டி வீதி, சாவகச்சேரி.**

**V.M.K. குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயணன் இலக்கிய விருது

கொழும்பு, ஜன. 20

இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம், லண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் இணைந்து நடத்தும் 2023ஆம் ஆண்டுக்கான இரா உதயணன் இலக்கிய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. விருதுகளைப் பெறுவோர் விவரம் வருமாறு:-

**நாவல் இலக்கியம்**

ஊமை மோகம்(2020) - சிவ. ஆருரன்,
அன்புடையர் என்பும் உரியர் பிறர்க்கு (2021) - ஆ.மு.சி. வேலழகன்,
வேரோகிப்போன மனிதர்கள்(2022) - ஏ.எஸ்.உபைத்துல்லா.

**சிறுகதை இலக்கியம்**

அரண் (2022) - கலாநிதி த.கலாமணி,
வல்லமை தாராயோ? (2022) - மாத்தளை பெ.வடிவேலன்.

**கவிதை இலக்கியம்**

பாரதிக்கு பதில் மடல் (2021) - திருமதி நஸீரா எஸ்.ஆப்தீன்,
என் இனிய பட்டாம்பூச்சிக்கு (2022) -வி.மைக்கல்கொலின்.

**சிறுவர் இலக்கியம்**

வைரமுத்துக்கள்(2020)- வை.கஜேந்திரன்
அழகிய உலகம் (2021) - மருத்துவர். எஸ்.பஞ்சகல்யாணி,
வளர்நிலா (2022) - அ.பௌநந்தி

**தமிழ் வளர்ச்சி இலக்கியம்**

மன்னார் மாதோட்டப் புலவர்கள் கலைஞர்கள் (2021) - அருட்திரு.தமிழ்நேசன் அடிகளார்.

**மொழிபெயர்ப்பு இலக்கியம்**

பூக்களின் கனவுகள் (2020) - திருமதி கெகிராவ ஸுலைஹா.

**இன நல்லிணக்க இலக்கியம்**

தேத்தண்ணி (2021) - இரா. சடகோபன்.

**அயலகப் படைப்பு இலக்கியம்**

வடக்கு வீதியிலே (2021) - குரு. சதாசிவம்,
ஆழக்கீறல் (2021) - நக்கீரன் மகள்.

**அதி உயர் இலக்கிய விருது**

மூத்த எழுத்தாளர்(2020) - ச.அருளானந்தம்கேணிப்பித்தன்
மூத்த எழுத்தாளர்(2021) - திருமதி நயீமா சித்தீக்,
மூத்த எழுத்தாளர்(2022) - நி.பி. அருளானந்தம்.

**அதி உயர் வாழ்நாள் சாதனையாளர் விருது**

மூத்த எழுத்தாளர்(2020) - வி.தி.இளங்கோவன்
மூத்த எழுத்தாளர்(2021) - திருமதி மலரன்னை
மூத்த எழுத்தாளர்(2022) - திருமதி கோகிலா மகேந்திரன்.

**சிறந்த ஆவணவாக்கல் சேவை விருது**

நூல்தேட்டம் - என்.செல்வராசா.

**சிறந்த ஊடகவியலாளர் விருது**

மூத்த எழுத்தாளர்(2020) - நா.பத்மசீலன்
மூத்த எழுத்தாளர்(2021) -திருமதி சந்திரா பெர்ணாண்டோ.

**இளம் ஊடகவியலாளர் விருது**

ஊடகவியலாளர் (2022) - நவரட்ணம் கபில்நாத். (ரி)

The Royal College of Jaffna
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில...
By: விக்கினேஸ்வரன் ஆச்சார்யார்
குபேரன் கட்டட மாடி, பிரான்பற்று வீதி, சங்கத்தானை.
077 675 1649

# கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு
## பதவி வெற்றிடங்களிற்கான விண்ணப்பங்கள் கோரல்

கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கத்தில் வெற்றிடமான பின்வரும் பதவிகளிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தினை ரூபா 20/- செலுத்தி பெற்று பூரணப்படுத்தி அத்துடன் பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிழ் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிட்டு எதிர்வரும் 07.02.2024ம் திகதிக்கு முன்னராக தலைவர், கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

வயதெல்லை 18தொடக்கம் 45வரை (சங்கபணியாளர்களிற்கு வயதெல்லை பொருந்தாது)

முல்லைத்தீவு மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும். வேறு கூட்டுறவுச் சங்கங்களிட மிருந்து விண்ணப்பிப்பவர்கள் தாங்கள் கடமையாற்றும் சங்கம் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

அத்துடன் எவரேனும் ஒருவர் கூட்டுறவுச் சங்கத்தில் சேவையாற்றுகின்ற அதே வேளையில் நேரடியாக விண்ணப்பத்தினை சமர்ப்பித்துள்ளார் என அவர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னரேனும் தெரியவரு மாயின் பதவி இழப்பதற்கு அது ஒரு காரணமாக அமையும்.

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபஇலக்கங்கள் 04/2017(1), 04/2018(1)ற்கு அமைய வாழ்க்கைச் செலவுப்படியும். விசேட செயலாற்றுகைப்படியும் வழங்கப்படும்.

இப்பதவிகட்கு விண்ணப்பங்கள் செய்யும் விண்ணப்பதாரர்கள் தெரிவுசெய்யப்படுமிடத்து சங்கத்தில் பிணை செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

**திரு.கு.விக்ரர் ஜெயசிங்கம்**
**தலைவர்.**
**கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு.**

**திகதி:- 20.01.2024**

**பதவி :- பொதுமுகாமையாளர்**
சம்பள குறியீட்டு இல :- 101 / 08
சம்பள அளவுத்திட்டம் :- 20665.00 - 260 x10- 280 x10 – 26065.00
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபம் 01/2022ற்கு அமைய மாதாந்தம் ரூபா 5000/- மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்:**

அ) கூட்டுறவு ஊழியர் 9ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப்பதவி யொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம். **அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம் / அதற்குச் சமமான தகைமை. இத் தகைமையானது கணக்கியல் / வியாபாரப் புள்ளி விபரவியல் / வியாபாரக்கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்
இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/ முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி. **அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/ க.பொ.த உயர் தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம ஒன்றில்/ அங்கீகரிக்கப் பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவி யொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகால அனுபவம்

**பதவி :- கிளை முகாமையாளர்**
சம்பள குறியீட்டு இல :- 208/13
சம்பள அளவுத்திட்டம் :- 18360.00 - 160x10-170x10 – 21660.00
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபம் 01/2022ற்கு அமைய மாதாந்தம் ரூபா 5000/- மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்:**

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம். **அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி /க.பொ.த.சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் உட்பட 3 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**பதவி :- கிளை முகாமையாளர்**
சம்பள குறியீட்டு இல :- 208/14
சம்பள அளவுத்திட்டம் :- 17900.00 - 155x10-165x10 – 21100.00
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபம் 01/2022ற்கு அமைய மாதாந்தம் ரூபா 5000/- மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்:**

அ) கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம். **அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த.சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இருஅமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் /தமிழ்மொழி. கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**பதவி :- கிளை முகாமையாளர்**
சம்பள குறியீட்டு இல :- 208/15
சம்பள அளவுத்திட்டம் :- 17435.00 - 145x10-160x10 – 20485.00
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபம் 01/2022ற்கு அமைய மாதாந்தம் ரூபா 5000/- மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்:**

அ) கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்/
கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். **அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த.சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி. கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**பதவி :- கிராமிய வங்கி வெளிக்கள உத்தியோகத்தர்**
சம்பள குறியீட்டு இல :- 210/13
சம்பள அளவுத்திட்டம் :- 18360.00 - 160x10-170x10 – 21660.00
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபம் 01/2022ற்கு அமைய மாதாந்தம் ரூபா 5000/- மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்:**

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில்/ எழுதுநர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்/
கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில/ எழுதுநர் பதவியில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி. கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 3 திறமைச்சித்தியுடன் கூடிய 6 பாடங்களுடனான சித்தி.

**பதவி :- விற்பனை உதவியாளர்**
சம்பள குறியீட்டு இல :- 308/15
சம்பள அளவுத்திட்டம் :- 17435.00 - 145x10-160x10 – 20485.00
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபம் 01/2022ற்கு அமைய மாதாந்தம் ரூபா 5000/- மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்:**

அ) கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் /எரிபொருள் நிரப்புநர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்/.
கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். **அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு அமஉவுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி. கணிதம் என்பவற்றை. உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி

**பதவி :- சாரதி**
சம்பள குறியீட்டு இல :- 312/13
சம்பள அளவுத்திட்டம் :- 18360.00 - 160x10-170x10 – 21660.00
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபம் 01/2022ற்கு அமைய மாதாந்தம் ரூபா 5000/- மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்:**

அ) 05 ஆம் தரக் கல்விச் சான்றிதழுடன் பேருந்து/ லொறி/ பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்

**பதவி :- எரிபொருள் நிரப்புநர்**
சம்பள குறியீட்டு இல :- 313/16
சம்பள அளவுத்திட்டம் :- 16975.00 - 135x10-150x10 – 19825.00
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபம் 01/2022ற்கு அமைய மாதாந்தம் ரூபா 5000/- மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்:**

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம். **அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்/ 08 ஆம் தர கல்விச் சான்றிதழ்.

**பதவி :- அலுவலக உதவியாளர்**
சம்பள குறியீட்டு இல :- 317/16
சம்பள அளவுத்திட்டம் :- 16975.00 - 135x10-150x10 – 19825.00
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபம் 01/2022ற்கு அமைய மாதாந்தம் ரூபா 5000/- மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்:**


அ) கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம். **அல்லது**

ஆ கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்/ 08 ஆம் தர கல்விச் சான்றிதழ்.

**தலைவர்,**
**கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் சிவசுப்பிரமணியம்

காரைநகர் கரப்பிட்டியந்தனை களபூமியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவசுப்பிரமணியம் நேற்று (19.01.2024) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், இராசரட்ணம் அவர்களின் அன்புச்சகோதரனும், அல்லிராணி அவர்களின் பாசமிகு கணவரும் வீரசுதாகரன் (சுதா), சுரேஸ்குமார் (முகாமையாளர் ஹற்றன் நஷனல் வங்கி வவுனியா), விஜயரூபன் (ஜேர்மனி), சஜித்திரன் (ராஜன், ஜேர்மனி), சுஜாதா அவர்களின் பாசமிகு தந்தையும் மேனகா, தட்சாயினி, சஹானா, சுபாஷினி, சுதேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கனிமொழி, அக்ஷயன், யுவர்ஷன், விஹாஷன், நேகா, திவ்யன், தஷ்வி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் காரைநகர் தில்லை இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.


கரப்பிட்டியந்தனை, களபூமி
காரைநகர்

தகவல்: குடும்பத்தினர்.
077 257 6551

(CS 27714) V-1

## மரண அறிவித்தல்

மலர்வு
01 . 10 . 1948



உதிர்வு
13 . 01 . 2024

### விநாசித்தம்பி சந்திரசேகரம்

(வேல் சன்ஸ் உரிமையாளர், ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி சந்திரசேகரம் அவர்கள் (13.01.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி துரையம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், மீராஜினி (பிரான்ஸ்), குருசாந்த் (பிரான்ஸ்), மிதுலா (கனடா), ஹலசப்பிரசாந்த் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரமேஸ் (பிரான்ஸ்), சோபி (பிரான்ஸ்), ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அதிரன் (பிரான்ஸ்), ஆதீசன் (கனடா), கதிர் (பிரான்ஸ்), கயல் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இராஜபாக்கியம், மணியம்மா, உதயசந்திரன், குணசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கதிர்காமநாதன் (பிரான்ஸ்) மற்றும் சிதம்பரநாதன் (ஜேர்மனி), யோகேஸ்வரி (லண்டன்), புஸ்பவதி (சுவிஸ்) ஆகியோரின் அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் கோம்பயன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகன் - 075 760 9172 (யாழ்ப்பாணம்) (ஹலசம்)
மகன் - 0033767400637 (பிரான்ஸ்) (குருசாந்த்)
மருமகன் - 003365101319 (பிரான்ஸ்) (ரமேஸ்)
மருமகன் - 0012042911345 (கனடா) (ரவி)

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27722) S-1

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
29.05.1980

மறைவு
16.01.2019

### அமரர் தங்கராசா ஜெயராகவன் (ராகவன்)

திதி : தைமாத வளர்பிறை தசமி (20.01.2024)

ஆல்போல் தளைத்து அறுகுபோல் வேர் ஊன்றி
வையகத்தில் நீடூழி வாழ்வாய் என்று நினைத்து
இருக்க சொற்பவயதில் இந்த அம்மாவை
தவிக்கவிட்டு இறைவனுடன் ஐக்கியமாகி
ஆண்டு 5 ஆகிவிட்டது என் அன்புச் செல்வமே
எத்தனை ஆண்டு தான் வந்துபோனாலும்
நித்தம் நித்தம் உன் பிரிவுத்துயர் தாங்காது
கலங்கித் தவிக்கின்றேன் உன் ஆத்மா
சாந்தி அடைய இறைவனிடம் வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி!

உன் பிரிவால் துயருறும் உன் அம்மா
தங்கராசா நாகேஸ்வரி (தவம்)
அக்கா ஜெயலட்சுமி (ஜெயா)
குடும்பம் (சுவிஸ்)


வலந்தலை, பெரியமணல்,
காரைநகர்

(cs.53359) (N -I)

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

தோற்றம்
29 . 12 . 1939



மறைவு
17 . 01 . 2024

### முருகேசு சச்சிதானந்தம்

அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட முருகேசு சச்சிதானந்தம் அவர்கள் 17.01.2024 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், சாலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லமுத்து தம்பதியரின் அன்ப மருமகனும், யோகமலரின் அன்புக் கணவரும், ஆனந்தசோதி, சிவசோதி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஶ்ரீரதி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆர்த்தி, அபிரா, மதுஷாயினி, ஸ்னேகா, யசிந் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தீர்த்தாங்குளம் உள்ளிவிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோவிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
074 242 1553

(CR 41592) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பதில் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கிணங்க நாடு பூராகவும் போதைப்பொருள் ஒழிப்புத் திட்டமாகிய 'யுத்திய வேலைத்திட்டம்' பொலிஸாரால் நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், யுக்திய நடவடிக்கைகளுக்கு ஆசி வேண்டி யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பொலிஸார் அண்மையில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டனர். (ம-26)

தொழில்முனைவோருக்கு

# வாழ்வாதார உதவிகள்

கிளிநொச்சி, ஜன.20

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சமூக சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் தொழில் முனைவோருக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிப் பொருள்களை மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ. வாகீசன் கிளிநொச்சி மாவட்ட 3 பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட பூநகரி, பல்லவராயன்கட்டு, பளை, தர்மக்கேணி, வலைப்பாடு, நாச்சிக்குடா போன்ற பகுதிகளிலுள்ள 11 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நேற்று வெள்ளிக்கிழமை வழங்கி வைத்தார். (ப-113)



# ஆடுகள் வழங்கல்

மன்னார், நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் பொருண்மியம் நலிவுற்ற மற்றும் பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த 26 பயனாளிகளுக்கு தலா 75 ஆ[illegible]ம் ரூபா பெறுமதியான மூன்று ஆடுகளை [illegible]ராமிய பொருளாதார இராஜாங்க அமை[illegible]ர் ஊடாக அமைச்சர் மு.காதர் மஸ்தா[illegible]ன் வேண்டுகோளுக்கு இணங்க நானா[illegible]ன் பிரதேச செயலாளர் கனகாம்பிகை [illegible]சம்பு நேற்று வெள்ளிக்கிழமை வழங்[illegible]வைத்தார். இந்த நிகழ்வில் மாவட்ட விவசா[illegible] பணிப்பாளர், இராஜாங்க அமைச்சரின் [illegible]ணைப்பாளர்கள், நானாட்டான் பிரதேச கால்நடை மருத்துவர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-213)

# பசுநேயம் காப்போம்

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளில் அகில இலங்கை சைவமகா சபையினரால் 'பசுநேயம் காப்போம்' எனும் தலைப்பிலான விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (ப-66)


## இலங்கை மின்சார சபை, உத்துறு ஜனனி மின்னிலைய வளாகத்தினை சுத்திகரிப்பு சேவை சம்பந்தமான கேள்விப்பத்திங்கள்

இலங்கை மின்சாரசபை உத்துறு ஜனனி மின்னிலையத்திற்கு சுத்திகரிப்பு சேவைகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப்பத்திரங்களை அலுவலக நேரத்தில் பி.ப. 3.00 மணிவரை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான பொறியியலாளர்,
யாழ் ஒளி மின்நிலையம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.
தொ.பே.இல. 021 224 2247/8**

Office of the Deputy General Manager,
Ceylon Electricity Board,
Generation Head Quarters,
New Kelani Bridge Road,
Kolonnawa.
Telephone No.0112 423 897

1. கேள்விப்பத்திர பெறுமதி
(Price of the Bid Doeument : ரூபா. 2,000.00
2. கேள்விப்பத்திர பிணை வைப்பு
(Value of Bid Bond : ரூபா. 50,000.00

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை

**Office of the Deputy General Manager,
Ceylon Electricity Board,
Generation Head Quarters,
New Kelani Bridge Road,
Kolonnawa.
Telephone No.0112 423 897**

கேள்விப்பத்திரங்கள் **14/02/2024** மு.ப 10.00 மணிக்கு **Office of the Deputy General Manager, Ceylon Electricity Board, Generation Head Quarters, New Kelani Bridge Road, Kolonnawa.** என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் திறக்கப்படும்.

(ஏ.41586) (N-1)


ராஜ் ராஜரட்ணம் எழுதிய

# சமனற்ற நீதி நூல் வெளியீடு

யாழ்., ஜன. 20

ராஜ் ராஜரட்ணம் எழுதிய சமனற்ற நீதி என்ற நூல் வெளியீட்டு விழா இன்று இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட ஹூவர் கலையரங்கத்தில் இன்று பிற்பகல் 2.45 மணிக்கு இந்த நூல் வெளியீடு இடம்பெறவுள்ளது.

முதலீட்டாளரும் பெரும் செல்வந்தருமான ராஜ்ராஜரட்ணம், அமெரிக்கச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது எழுதிய நூலின் தமிழாக்கமே 'சமனற்ற நீதி' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு இன்று வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)


## வேலைவாய்ப்பு

பிரபல கல்விசார் நிறுவனம் ஒன்றிற்கான அலுவலக உதவியாளர் (Office Assistant) - பெண் வேலை வாய்ப்பிற்கான நேர்முகத் தேர்வு 27.28-01 - 2024 மாலை 2pm-5pm வரை நடைபெறவுள்ளது.

நேர்முகத்தேர்வில் சுயவிபரக்கோவை. IC பிரதி. சமர்ப்பிக்கவேண்டும். வயது 20-30.
அடிப்படை தகைமை G.C.E (O/L)
சம்பளம் - 25,000/=

தொடர்பு: 074 264 0484

## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

**எம் இனிய உறவுகளுக்கு இனிய பொங்கல் வாழ்த்துக்கள்**

எம்மிடம் எல்லா இனத்தவர்களுக்கும் எல்லா மதத்தினருக்கும் அரசாங்க உத்தியோகம். உத்தியோகம் அல்லாதது. உள்நாடு வெளிநாடு. செவ்வாய் குற்றம் உள்ளது. இல்லாதது. சூரிய செவ். சகலருக்கும் பொருத்தமான மணமகன்கள். மணமகள்கள் ஏராளம் உண்டு. உங்களுக்கு பொருத்தமான வரன்களை எம்மால் விரைவாக ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு: வீ.ஜெயந்தி
077 9733 183

(CS 275578) A-1


## கண்ணீர் அஞ்சலி

அமரர் **வசந்தரூபா ஈஸ்வரபாதம்**
**(கொக்குவில் கிழக்கு நந்தாவில்)**



எமது வளர்மதியின் வளர்ச்சி க்கு பெரிதும் உறுதுணையாக இருந்தவரும் முன்னைய நாள் முன்னேற்றக்கழக போசகரும் ஆகிய ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்களதும் முன்னைய நாள் வளர்மதி மகளிர்குழுவின் தலைவி அமரர் ஈஸ்வரபவானி சோமசுந்தரம் அவர்களின் அன்புத்தாயாரும் ஆகிய வசந்தரூபா ஈஸ்வரபாதம் அவர்கள் இறைபதம் அடைந்து விட்டார்.


அன்னாருக்கு எமது [illegible]ணீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா[illegible]தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். அமரரின் பிரிவால் [illegible]ற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது வளர்மதி முன்னேற்றக்கழகம்[illegible]ல் ஆழ்ந்த ஆனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சம்பியன் லேன்
கொக்குவில்.**

**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகமும் சனசமூக நிலையமும்.**

(CS 27789) V-1

## மரண அறிவித்தல்



### துரைராஜா குணபாலசிங்கம்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியை பிறப்பிடமாகவம், இணுவில் வட்டுவினியை வதிவிடமாகவும் கொண்ட துரைராஜா குணபாலசிங்கம் அவர்கள் நேற்று (19.01.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராஜா செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவதேவராணியின் அன்புக் கணவரும், சியாமளா (ஜேர்மனி), மஞ்சுளா (தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை), குணசீலன் (பிரான்ஸ்), கௌசல்யா (இத்தாலி), தனுஷா (ஆசிரியர் யா/ கைதடி நுனாவில் அ.த.க.பா), டயனி (லண்டன்), கோகிலன் (Uniliver சாவகச்சேரி), குபேரநாத் (Uniliver யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பதீஸ்குமார் (ஜேர்மனி), திலிபன் (சித்தங்கேணி), துஸ்யந்தி (பிரான்ஸ்), ஜீவச்சந்திரன் (இத்தாலி), சுதாகரன் (சாவகச்சேரி), அபயன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜீபன், மயூரஷா, கேதனா, தஜீஸ், வினுஜா, ஆதீஸ், கர்ஷிகன், விவாஸ், வைஸ்ணா, தக்ஷன், கனுசிகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 0690171**


(CS 27724) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத மதுபானத்துடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டைப் பகுதியில் 12 லீற்றர் சட்டவிரோத மதுபானத்துடன் 53 வயதான நபர் ஒருவரை யாழ்ப்பாணப் பொலிஸார் ஆனைக்கோட்டையில் வைத்து கைது செய்தனர். யாழ்ப்பாணப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள வீடொன்றைச் சோதனையிட்ட போதே விற்பனைக்குத் தயாராக வைக்கப்பட்டிருந்த சட்டவிரோத மதுபானத்தைப் பொலிஸார் மீட்டனர். சந்தேகநபரிடம் யாழ்ப்பாணப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ப-66-26)

## நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை

ஆவினது மகனுக்கு அட்சம் தந்து
அடுத்து வந்த மேகலைக்கு சுரபி தந்து
மேவிவரும் அடியவர்க்கு அமுதம் தந்து
மேன் மேலும் பெருங்கருணை அள்ளித்தந்து
தேடி வரும் அன்பர் குறை தீர்த்து
ஆன்ம சித்தியுடன் முத்திபெற வைத்து
இன்பம் கோடி தரும் நயினையுறை நாகம்மாளே
குண்டலியே குட முழுக்கு ஆடீரம்மா.

### நயினையில் நாகபூஷணி அம்மனுக்கு திருக்குட முழுக்குப் பெருவிழா 24.01.2024

நாடி வரும் அடியவர்களுக்கு
அமுத சுரபியில் அன்னதானம்

நயினாதீவில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அன்னை நாகபூஷணி அம்மனுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் 24.01.2024 ஆம் திகதி திருக்குடமுழுக்குப் பெருவிழா மிகவும் சிறப்புற நடைபெற அன்னையின் திருவருள் கூடி நிற்கின்றது. இக் காலத்தில் (20.01.2024 - 25.01.2024) அன்னையைத் தரிசிக்கவரும் அடியார்கள் அனைவருக்கும் ஸ்ரீ நாகபூஷணி அமுத சுரபி அன்னதான மண்டபத்தில் சிறப்பு அன்னதானம் நடைபெறும்.


பிரதான சாலை,
நயினாதீவு -2

நிர்வாகம்
ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி
அன்னதான சபை.

(cs.53580) (N -1



## இணுவில் கந்தசுவாமி கோயில் தைப்பூச பெருமஞ்சத் திருவிழா தற்காலிக கடைகள் அமைப்பதற்கான அனுமதியினை பெறல்



**25.01.2024 வியாழக்கிழமை
மஞ்சத்திருவிழா நடைபெறவுள்ளது.**

அன்றைய தினம் ஆலய சுற்றுச் சூழலில் கடைகள், உணவகங்கள் அமைப்பதற்கு முன்கூட்டியே அனுமதி பெறுவதற்கான கூட்டம் இணுவில் அறிவாலயத்தில் எதிர்வரும் 22.01.2024 திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆலய நிர்வாகசபையினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

முன் அனுமதி பெறாத வர்த்தக நடவடிக்கைகள் தடை செய்யப்படும்.

நிர்வாக சபையினர்,
இணுவில் கந்தசுவாமி கோயில்.





## இணுவில் கந்தசுவாமி கோயில் தைப்பூச உலகப் பெருமஞ்சத் திருவிழா பால்குடப் பவனி

**காலம்
25.01.2024
வியாழக்கிழமை**



**காலை 6.00 மணிக்கு பால்குடப் பவனி
இணுவில் மருதனார்மடம் பல்லப்பை வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பம்**

**குறிப்பு:-** பால், குடம் என்பன ஆலயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
(வீட்டிலிருந்து எந்தப் பொருட்களும் கொண்டுவரத் தேவையில்லை.)

சென்ற வருடம் போல் நேர்த்தி செய்வதற்கு யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்து பெரும் தொகையான பக்தர்கள் பால் குடத்தில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்ப்பதனால் முற்பதிவுகளை 23.01.2024 செவ்வாய்க்கிழமைக்கு முன்பு ஆலய கருமபீடத்தில் மாலை 04.00 - 06.00 மணிவரை மேற்கொள்ளலாம்.

**பால்குட பற்றுச்சீட்டு-400/=**

வருடத்தில் ஒரு தடவை சண்முகப் பெருமானுக்கு முருகபக்தர்கள் எல்லோரும் கூடி எடுக்கும் பால் குட பவனியில் நாம் எல்லோரும் கலந்து சண்முகப் பெருமானுக்கு பால் அபிஷேகம் செய்வோல் வாரீர்....

விளம்பர அனுசரனை:-

| | | |
|---|---|---|
| **அண்ணா தொழிலகம்**<br>**இணுவில்** | **துளசி சிற்பாலயம்**<br>தாவடி வடக்கு, இணுவில்.<br>077 6158 071 | **சாந்தி** றெக்ஸ்ரைல்ஸ்<br>157,158,<br>மின்சார நிலைய வீதி,<br>யாழ்ப்பாணம். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத...

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் உள்ளதாவது:-

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள மிகவும் ஆபத்தான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றீடு செய்வதற்காக இலங்கையின் நாடாளுமன்றத்தில் தற்போது ஆராயப்பட்டுவரும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டவரைவு குறித்து மிகுந்த கரிசனை கொண்டுள்ளோம்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது இலங்கையின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கான ஓர் அர்த்தமுள்ள சீர்திருத்தமாக இருக்கவேண்டும். ஆனால் இந்த முன்மொழியப்பட்டுள்ள சட்டவரைவானது கடந்தகாலத்தின் உரிமை மீறல் வடிவங்களில் ஆபத்தைக் கொண்டுள்ளது. நீதித்துறையின் உத்தரவாதங்களின் வரம்பைக் கட்டுப்படுத்துகின்றது. குறிப்பாக சட்டபூர்வமற்ற தடுத்துவைத்தல் போன்றவற்றில் நீதித்துறையின் தலையீட்டை இல்லாமற் செய்கின்றது. தற்போதைய வடிவத்தில் இந்த சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால் அது மக்களுக்கு உள்ள உரிமைகளை கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு அதிகளவு அதிகாரங்களை வழங்கும். ஆதலால் இந்தச் சட்டவரைவை இலங்கை அரசாங்கம் அவசியம் மீளாய்வு செய்யவேண்டும் - என்றுள்ளது. (அ-ம)

## கிழக்கு...

தவிர்க்கமுடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

உகண்டாவில் அணிசேரா நாடுகளின் 19ஆவது உச்சிமாநாடு நேற்று ஆரம்பமானது. இந்த மாநாட்டில் வைத்தே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்கள் மற்றும் அணிசேரா இயக்கத்தின் பிரகடனத்துடன் இஸ்ரேல் இணங்க வேண்டிய தன் அவசியத்தை ஜனாதிபதி எடுத்துரைத்தார். காஸாவின் இன அமைப்பில் எந்த மாற்றமும் இருக்கக்கூடாது. ஐந்து ஆண்டுகளுக்குள் பலஸ்தீன அரசு நிறுவப்படவேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் உட்புகுந்து சரமாரியான தாக்குதல்களை ஹமாஸ் குழுவினர் மேற்கொண்டனர். இதையடுத்து கடந்த மூன்று மாதங்களாக காஸாவில் கடும் தாக்குதல்களை இஸ்ரேல் மேற்கொண்டு வருகின்றது. இந்தத் தாக்குதல்களில் 25 ஆயிரம் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 65 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர். காஸாவில் இஸ்ரேல் போர்க்குற்றம் புரிகின்றது என்று தெரிவித்து சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா வழக்குத் தொடர்ந்துள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில்தான் பலஸ்தீனம் அங்கீகரிக்கப்பட வேண்டிய தன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக சர்வதேச நீதிமன்றத்தில் இஸ்ரேலுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்த தென்னாபிரிக்கப் பிரதிநிதியின் அருகில் அமர்ந்திருந்து இந்த விடயத்தை அவர் முன்வைத்துள்ளார். (அ-ம)

## பரபரப்பு...

மத்திய குழுக்கூட்டம் காரணம் குறிப்பிடப்படாமல் இரத்துச்செய்யப்பட்டுள்ளது. இதனால், தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்ற பரபரப்புகள் இறுதிவரை தொடர்ந்த நிலையில், 'தேர்தல் திட்டமிட்டவாறு இடம்பெறும்' என்று தலைமைப் பதவிக்கான வேட்பாளர்கள் உறுதிப்படுத்தினார்கள். இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு புதியதலைவரைத் தெரிவுசெய்ய வேண்டும் என்பது தொடர்பில் அண்மையில் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருந்தன. தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபாரணம் ஆபிரகாம் சுமந்திரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகிய மூவரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன.

தேர்தல் நாளை திட்டமிடப்பட்டிருந்த நிலையில் இன்று மத்திய குழுக்கூட்டம் இடம்பெறுவதாகவிருந்தது. எனினும் இந்தக் கூட்டம் திடீரென இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவைத் தொடர்புகொண்டு கேட்டபோது, 'கூட்டம் இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது' என்று தெரிவித்தார். எனினும் தேர்தல் இடம்பெறும் என்பதை வேட்பாளர்கள் உறுதிப்படுத்தினார்கள்.

திருகோணமலையில் நாளை நடைபெறும் பொதுக்குழுக் கூட்டத்தில் ஜனநாயக முறையிலான இரகசிய வாக்கெடுப்பு மூலம் தமிழரசுக் கட்சிக்கான தலைவர் தெரிவு இடம்பெறவுள்ளது. (அ-ம)

## ஜனாதிபதியாக...

மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டை மீட்பதற்கான உரிய பொருளாதார வேலைத்திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ளது. உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருளாதார நிபுணர்களான ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன மற்றும் கபீர் ஹாசீம் உள்ளிட்ட குழுவினரால் அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. எமது ஆட்சியில் ஹர்ஷ டி சில்வாவே நிதி அமைச்சர். எனினும், ஜே.வி.பி. உள்ளிட்ட தரப்புகள் இன்னும் வேலைத்திட்டத்தை முன்வைக்கவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் ஏற்கனவே அங்கம் வகித்த பங்காளிக்கட்சிகள் உள்ளன, தற்போது புதிதாக கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்துவருகின்றனர். நாடாளுமன்றத்துக்கு வெளியில் இருந்தும் அரசியல்வாதிகள் வருகின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியின் தலைவர் சஜித், ஜனாதிபதி வேட்பாளர் சஜித் என்ற விடயத்தை அவர்கள் ஏற்றுள்ளனர். எனவே, வேட்பாளர் விடயத்தில் மாற்றம் வராது. எவ்வளவு பெரிய கூட்டணி அமைந்தாலும் சஜித் தான் வேட்பாளர்.

ரணில் விக்கிரமசிங்க ராஜபக்சக்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துவருகின்றார். அவருடன் நாம் ஒருபோதும் இணையப்போவதில்லை' - என்றார். (அ-ம-44)

## பெல்ஜியத்திலிருந்து...

எரிக்கப்பட்டன. 2 கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் இதன்போது எரிந்தழிந்தன. அத்துடன் கார் ஒன்றும் எரிக்கப்பட்டது. இதைவிட மோட்டார்சைக்கிள் ஒன்று பறிமுதல் செய்யப்பட்டிருந்தது. இவை தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருந்த நிலையில், அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸார் நேற்று மூன்று பிரதான சந்தேகநபர்களைக் கைதுசெய்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து இரண்டு மோட்டார்சைக்கிள்கள், ஒரு வாள் என்பன மீட்கப்பட்டன.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சந்தேகநபர் ஒருவரின் பெல்ஜியம் வாழ் பெரியம்மாவின் நட்பு வட்டாரத்திலிருந்து விடுக்கப்பட்ட உத்தரவுக்கு அமையவே இந்த விஷமச் செயலில் அவர்கள் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடைகளை எரிப்பதற்காக 12 இலட்சம் ரூபா பணமும், வாகனங்களை எரிப்பதற்காக 7 இலட்சம் ரூபா பணமும் பெல்ஜியத்தில் இருக்கும் நபரிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுவதற்கு வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ஒன்றரை இலட்சம் ரூபா பணமும் அவர்களுடைய வங்கிக் கணக்குக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து குற்றச்செயல்களின் சூத்திரதாரியான பெல்ஜியம் வாழ் நபரை இன்டர்போலின் உதவியுடன் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-26)

## மயங்கி...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்தனர்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் அவருக்கு டெங்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (அ-ம-66-26)

## பங்களாதேஷ்...

சடலத்துக்கு அருகிலுள்ள பை ஒன்றிலிருந்து பங்களாதேஷ் நாணயத் தாள்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆதலால், சடலமாக மீட்கப்பட்டவர் பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்தவர் என்று நம்பப்படுகின்றது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-19)

## ஐ.நா.வை...

அணிசேரா நாடுகளின் 19ஆவது உச்சிமாநாடு உகண்டாவின் தலைநகர் கம்பலாவில் நேற்று ஆரம்பமானது. இந்த மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரடியாகக் கலந்துகொண்டுள்ளார். இந்த மாநாட்டில் கலந்துகொண்டுள்ள ஏனைய நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் நியாயப்பாட்டை வலியுறுத்துவது தொடர்பில் அவர் பேசவுள்ளார் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உள்நாட்டுப் போர் விவகாரத்தில் நீதியை நிலைநாட்டுவதற்காக, 'உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு' என்பதை தென்னாபிரிக்கப் பொறிமுறையை மாதிரியாகக் கொண்டு ஜனாதிபதி ரணில் நிறுவி வருகின்றார். இது தொடர்பிலும் இந்த இருதரப்புச் சந்திப்பில் ஜனாதிபதி சுட்டிக்காட்டுவார் என்று தெரியவருகின்றது. ஏற்கனவே, தென்னாபிரிக்கா, சுவிஸ் போன்ற நாடுகளை மையப்படுத்திய ஆதரவுக் கூட்டணியொன்றை ரணில் அமைத்து வருகின்றார் என்று அண்மைக்காலமாகத் தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில், ரணில் அணிசேரா நாடுகளின் தலைவர்களை அணுகியுள்ளமை பரபரப்பாகியுள்ளது. (அ-ம)

## பொருளாதாரம்...

யில் இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். இந்தச் சுற்றுப்பயணத்தின்போது அடுத்தகட்ட கடன் வழங்கல்கள் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. இதன்போதே இலங்கையின் பொருளாதாரம் மெல்லமெல்லப் பலப்படுகின்றது என்றவாறாகத் தெரிவித்துள்ளார் சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான தூதுக் குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் பொருளாதாரம் பலப்படுவதை அவதானிக்க முடிகின்றது. ஆனால், பொருளாதார மீட்சிக்கான செயற்பாடுகள் இன்னும் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் செயற்பாடுகள் இன்னும் பெருமளவு மக்களைச் சென்றடையவில்லை. சர்வதேச நாணயநிதியம் வழங்கும் இலக்குகளை அடைய இலங்கைக்கு சொத்துவரி பெரும் உறுதுணையாக இருக்கும் - என்றார். (அ-ம)

## சர்வதேச...

வடமாகாணத்தின் தொழில் முயற்சியாளர்களின் நன்மை கருதி இம்முறை இந்தக் கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீடாதிபதி ந.கெங்காதரன், யாழ்ப்பாண வர்த்தகத் தொழில்துறை மன்றத்தின் தலைவர் கே.விக்னேஷ் மற்றும் மன்ற நிர்வாகத்தினர், யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், அனுசரணையாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இந்த வர்த்தகக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை வரை மு.ப.10 மணிமுதல் இரவு 8 மணிவரை இடம்பெறவுள்ளது. ஆரம்பநாளான நேற்றுப் பல நூற்றுக்கணக்கான மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் கண்காட்சியைப் பார்வையிட்டனர். இந்த வருடம் 350 காட்சிக் கூடங்கள் மேற்படி கண்காட்சியில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-20)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A-9 வீதி முகப்புடன் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- நிலப்பரப்பு
- நல்ல சூழல் நன்னீரூற்று
- கைதடி சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரம்.
- வடமாகாண சபை 300மீற்றர்
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

071 1733 911
076 8535 022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோப்பாய்ப் பகுதியில் பருத்தித்துறை வீதி பிரதான முகப்புடன் அமைந்துள்ள 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**077 077 4919**

## வீடு வாடகைக்கு

12 வருடங்களாக நடைபெற்று வரும் எமது நிறுவனத்திற்கு கிளைகளை விஸ்தரிப்பதற்காக கோப்பாய், திருநெல்வேலி, மானிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் வீடு வாடகைக்கு தேவைப்படுகின்றது... தொடர்புகளுக்கு

**077 337 4261**

## வேலைவாய்ப்பு

மன்னார் இலுப்பைக் கடவையில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு பணியாளர்கள் தேவை.

- காசாளர்
- கணக்கு உதவியாளர் (கணனி அறிவு தேவை)
- சப்ளையர்

தொடர்பு: **074 386 3050**

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள பிரபல பாமசி, சுப்பர்மார்கட்டுக்கு கீழ்வரும் வேலைவாய்ப்பு உண்டு. கணனி வேலையாளர்கள், உதவியாளர்கள், பாமசி வேலை தெரிந்தவர்களும், உதவியாளர்கள் மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டியது

**077 732 3702, 077 781 8108**

## மரண அறிவித்தல்

### நாகராசா அம்பிகாவதி



**தோற்றம்** 03.01.1946 **மறைவு** 18.01.2024

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா அம்பிகாவதி அவர்கள் கடந்த (18.01. 2024) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராசாவின் (வெடிமணியம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் தெய்வேந்திரம் (லண்டன்), சுதாகர் (ஜேர்மன்), வசந்தகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாநிதி, ஆனந்தி, நிவாஜினி, ராஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும், மகேஸ்வரி, அமராவதி, சத்தியபாமா, இராசயோகமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுபே, விஜே, சுஜித், சஞ்சி, தனுசிகா ஆகியோரின் அன்புப் பேரத்தியும், நாகம்மா, அருந்தவிதேவி, மனோரஞ்சிதம், இராசதுரை ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நெனியன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மட்டுவில் மத்தி,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 9025 126**

(CS 53593)A-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்திக்கு அருகாமையில் இராமநாதன் வீதி முகப்புடன் 1 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**யாழ்.பல்கலைக்கழகம்** முன்பாக, மற்றும் இராசபாதை வீதியிலும் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

விலை நேரில் பேசிக்கொள்ளலாம்

**பார்வையிடும் நேரம்: காலை 6 மணி முதல் மாலை 6மணிவரை.**

தொடர்பு: **077 468 3354**

(CS 27707) S-1

# மரண அறிவித்தல்



**தோற்றம்** 26.10.1929 **மறைவு** 18.01.2024

### திருமதி ஈஸ்வரபாதம் வசந்தரூபா

மலேசியாவை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஈஸ்வரபாதம் வசந்தரூபா அவர்கள் கடந்த (18.01.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற ஈஸ்வரபாதம் அவர்களின் அன்புத் துணைவியும், காலஞ்சென்ற ஈஸ்வரபவானி மற்றும் ரூபரஞ்சனி, சரவணபவன் (நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், நிர்வாக இயக்குநர் உதயன் - சஞ்சீவி நிறுவனம் ), ஸ்ரீரஞ்சனி (லண்டன்), முகுந்தன் (லண்டன் ), ஸ்ரீதரன் (லண்டன்), வசந்தினி (இந்தியா), கீதா கேதீஸ்வரி (லண்டன்), நவநீதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் பாலசுப்பிரமணியம், யசோதை, சக்திதாசன் (லண்டன்), விமலாதேவி (லண்டன்), பிரேமினி (லண்டன்), ராஜேந்திரன் (இந்தியா), ஸ்ரீகாந்தா (லண்டன்), சுகந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி ரஞ்சிதம் ராஜரத்தினம் (சிங்கப்பூர்), லீலா ரங்கநாதன் (மலேசியா), காலஞ்சென்ற அமலரதி மகேஸ்வரன் (மலேசியா) மற்றும் காலஞ்சென்ற மதனபூபாலன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு சகோதரியும் ரமணன், இசுரிகா, உமையாள், ஜெயபிரகாஷ், சிந்தியா.சுரேஸ்குமார், அபிராமி, அமர், சித்ரூபி, பிரகதீபன், பிரவீன்.வினிதா வைஷ்ணா, சாம், லக்ஷ்மி, விதுன், ரம்யா, வினோத், பிரஷிகன், சேயோன், விஷ்ணு ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், கேசவா, துருவா, நேத்ரா, டீரன், அக்ஷயன், ஆராதனா, லூஷியஸ், ஐவி, நோஆ ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை (22.01.2024 ) காலை 08.30 மணிக்கு 105, இராஜ வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**105, இராஜவீதி,**
**கோப்பாய். யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

A-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org